**4-வது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், உடுமலைப்பேட்டை**
**முன்னிலை : திரு.M.நம்பிராஜன்.,பி.ஏ,பி.எல்.,**
**4-வது கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**உடுமலைப்பேட்டை**

**2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26– ம் நாள் வியாழக்கிழமை**
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 12–ம் நாள்

**IA.No.3/2025 in O.S.No.154/2021**

வித்யாசாகர் ......... மனுதாரர்/பிரதிவாதி

//எதிர்//

1) வெங்கடேசன்
2) கலாவதி
3) லட்சுமி ........எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்னர் 26.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.R.சாகுல்அமீது, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் R.மோகன்ராஜ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரீசிலித்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்/பிரதிவாதி கடந்த 07.02.2025 அன்று அசல் வழக்கு எண்.154/2021 வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல் நடத்த உத்தரவிடக் கேட்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 13–ன் கீழ் மனுதாரர் / பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப் –பட்டுள்ளது.

**<u>2. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–</u>**

**2.1)** இம் மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தாவாச் சொத்தை பொறுத்து நான்கு சம பாகங்களாகப்

பிரித்து, அதில் மூன்று பாகங்கள் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு கிடைக்க முதல் நிலை தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டும் என்று கோரி தாவா தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கு விசாரணைக்கு வரப்பெற்று, அதில், 1ம் எதிர்மனுதாரர்/1–ம் வாதி (PWI) பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னிட்டு வா.சா.2(PW2)ஆன அஜய்குமார் சாட்சியம் அளித்து கடந்த 07.02.2025 ல் தாவா சொத்துக்களை நான்கு சம பாகங்களாகப் பிரித்து அதில் 3 பாகத்தினை எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு பிரித்து தர நிதீமன்றத்தில் ஒரு முதல்நிலை தீர்ப்பும், தீர்ப்பாணையும் மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக மஞ்சள் காமாலை நோய் ஏற்பட்டு, கேரளா சென்று தங்கியிருந்து, நாட்டு வைத்தியம் பார்த்து வந்துள்ளார். தற்போது உடல்நிலை தேறி, மனுதாரரின் வழக்கறிஞரைச் சந்தித்து விபரம் கேட்க, மேற்படி வீதம் ஒரு முதல்நிலை தீர்ப்பாணையும் மேற்படி வழக்கில் பிறப்பித்த விபரம் தற்போது தான் தெரிய வந்துள்ளது. ஆகவே கடந்த 07.02.2025 அன்று மனுதாரருக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்திரவினை (Exparty decree and judgement)ஐ ரத்து செய்து வழக்கினை மேல் நடத்த உத்தரவு பிறப்பிக்க வேண்டும். மேற்படி மனுதாரர் ஆஜரின்மை வேண்டுமென்று ஏற்பட்டதல்ல, மனுதாரரையும் மீறி ஏற்பட்டதொன்றாகும். மேற்படி வழக்கில் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் உள்ளது. ஆகவே, கடந்த 07.02.2025 அன்று மேற்படி வழக்கில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்திரவினை (Exparty decree and judgement) ரத்து செய்து மனு அனுமதிக்காவிடில் மனுதாருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட நேரிடும். எனவே, மனுவை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டு இந்த மனு மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் உரையின் சுருக்கம்:</u>**

**3.1)** 1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஒருதலை பட்ச தீர்ப்பை ரத்து செய்யக் கோரும் மனு பொய்யும், மோசடியுமாகும். சட்டப்படியும், நியாயப்படியும்

செல்லத்தக்கதல்ல. எதிர்உரையில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர இதர சங்கதிகளை மனுதாரர் கண்டிப்பாக நிரூபிக்க வேண்டும். மேற்படி வழக்கு 1–ம் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 18.12.2024–ம் தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ள விவரம் மட்டும் சரியானது. ஆனால் மேற்படி வாய்தா தேதிக்கு முன்னரே மனுதாரருக்கு கடுமையான மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு கேரளா சென்று தங்கி நாட்டு வைத்தியம் பார்த்து வந்ததாகவும், அதன் காரணமாக மனுதாரரால் கடந்த 18.12.2024–ம் தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராக இயலாத நிலையில் அவர் மீது கடந்த 18:12.2024–ம் தேதியில் ஒருதலை பட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் முற்றிலும் தவறானவை ஆகும். மனுதாரரும், அவரது மகன் கிஷோர் என்பவரும் சேர்ந்து உடுமலைப்பேட்டை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.108/2015 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வழக்கை அவர்கள் தள்ளுபடிக்கு விட்டுவிட்டு அதன் பின்னர் தாக்கல் செய்துள்ள ரெஸ்டோர் மனுக்களிலும் மனுதாரர் வெவ்வேறு தேதிகளில் தனக்கு மஞ்சள்காமாலையால் உடல்நலக் குறைவு ஏற்பட்டதாக பொய்யான சங்கதிகளை தெரிவித்துள்ளார்கள். மேற்படி ஆவணங்களை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளார்கள். மனுதாரருக்கு உடல்நலக் குறைவு மற்றும் மஞ்சள்காமாலை ஏற்பட்டதற்கான எவ்வித மருத்துவ ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இதிலிருந்தே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு பொய்யானது என்கிற விவரம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மனுவில் மனுதாரர் கோரியுள்ள எவ்வித பரிகாரங்களும் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் மனுவை செலவுதொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதைக் காண்பதேயாகும்.**

**5. தீர்வு:–**

**5.1)** மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி எனறும், எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்கள் மனுதாரருக்கு எதிராக தாவாசொத்தில் பாகப் பிரிவினை கோரி அசல் வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல்செய்தார்கள், மேற்படி வழக்கில் 1–வது எதிர்மனுதாரர் வா.சா.1 ஆகவும், பின்பு ஒரு அஜய்குமார் என்பவர் வா.சா.2 ஆகவும், விசாரணை செய்யப்பட்ட பின்பு மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை கடந்த 07.02.2025 அன்று பிறப்பிக்கப் பட்டுள்ளது. மனுதாரருக்கு மேற்படி காலகட்டத்தில் மஞ்சள்காமாலை நோய் இருந்ததால் கேரளா சென்று நாட்டுவைத்தியம் பார்த்துவந்த காரணத்தினால் வழக்கறிஞரை சந்தித்து மனுதாரர் தரப்பு வழக்கை முன்னிலைப்படுத்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்றும், எனவே, மேற்படி மனுதாரருக்கு எதிராக நீதின்றம் பிறப்பித்த உத்தரவை ரத்துசெய்ய வேண்டும் என்றும், மனுதாரர் இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். நீதிமன்றம் இந்த மனுவை அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

**5.2)** எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், மனுதாரர் ஒருதலைபட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட காலத்தில் மஞ்சள்காமாலை நோயால் பாதிக்கப்பட்டு கேரளாவில் சிகிச்சை எடுத்துக்கொண்டதாக சொல்வது பொய் என்றும், மனுதாரரும் அவருடைய மகன் கிஷோர் என்பவரும் சார்புநீதிமன்றம், உடுமலைப்பேட்டையில் அசல் வழக்கு எண்.108/2015 என்ற வழக்கை தாக்கல் செய்து மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு பின்னர் மேற்படி வழக்கை கோப்பிற்கு எடுக்க வேண்டும் என்று மனுதாரர் தாக்கல்செய்த மனுவில் தனக்கு மஞ்சள்காமாலை ஏற்பட்டதாகவும், அதனால் உடல்நலக் குறைவு ஏற்பட்டதாகவும், பொய்யாக குறிப்பிட்டுள்ளார். மனுதாரருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு கேரளாவில் சிகிச்சையில் இருந்தார் என்பதற்கு எவ்வித ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

5.3) நீதிமன்றம் இருதரப்பு வாதங்களையும் ஆவணங்களையும் பரிசீலனை செய்கையில், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு எதிராக தாவாசொத்தில் பாகப்பிரிவினை கோரி அசல் வழக்கு தாக்கல்செய்துள்ள விவரம் தெரிய வந்துள்ளது. மேற்படி வழக்கில் பிரதிவாதிகள் / மனுதாரர் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச தீர்ப்பாணை கடந்த 07.02.2025 அன்று இந்நீதிமன்றம் பிறப்பித்துள்ள விவரம் தெரியவந்துள்ளது. மனுதாரர் தரப்பில் மேற்படி காலகட்டத்தில் மனுதாரருக்கு மஞ்சள்காமாலை நோய் ஏற்பட்டு அவர் கேரளாவில் நாட்டுவைத்திய சிகிச்சையில் இருந்ததாகவும், அதனால் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வழக்கறிஞர் மூலமாக வழக்கை நடத்த முடியவில்லை என்று தெரிவித்துள்ளார். ஆனால் மனுதாரர் கேரளாவில் மஞ்சள்காமாலை நோய்க்காக சிகிச்சையில் இருந்தார் என்பதைக் காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை, சாட்சி எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை, ஆனபோதிலும், இருதரப்பினருக்கிடையேயான உண்மையான வழக்கை தீர்க்கும் பொருட்டும் நீதியின் நலனைக் கருத்தில்கொண்டும் நிபந்தனையுடன் மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மனுதாரர், எதிர்மனுதாரருக்கு மனு செலவு தொகையாக ரூ.4,000/- 10-04-2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் அவ்வாறு செலவுதொகை செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,**

மனுதாரர், எதிர்மனுதாரருக்கு மனு செலவு தொகையாக ரூ.4,000/-த்தை 10-04-2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும், அவ்வாறு மேற்குறிப்பிட்ட தேதிக்குள் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு செலவுதொகை செலுத்த தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மனு அனுமதிக்கப்படுகிறது. அழைக்க 10.04.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால்

பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN Date: 2026.03.26 18:50:55 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

**மனுதாரர்தரப்பில் சாட்சிகள் :– இல்லை**

**மனுதாரர்தரப்பில் ஆவணங்கள்:–இல்லை**

**எதிர்மனுதாரர்கள்தரப்பில் சாட்சிகள் மற்றும் ஆவணங்கள்:– இல்லை**

M NAMBIRAJAN Digitally signed by M NAMBIRAJAN Date: 2026.03.26 18:51:14 +0530

4–வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை

FAIR/DRAFT ORDER

**IA.No.3/2025**
**in**
**OS.No.154/2021**

Date: 26.03.2026
IV$^{th}$ ADJ Udt,